<u>பத்தியை வாசித்து கேள்விகளுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்திடுக.</u>

**தென்னை**

தென்னை மணற்பாங்கான இடங்களில் செழித்து வளரும். அஃது அறுபது எழுபது அடிவரை உயர்ந்து வளரும். தென்னைக்குக் கிளைகள் இல்லை. அதற்கு ஓலைகள் உள்ளன. ஈச்ச மரமும் பனைமரமும் பாக்கு மரமும் தென்னை இனத்தைச் சேர்ந்தவை. தென்னை பாளைவிடும். பாளை வெடித்து விரிந்ததும் அதில் உள்ள பூக்களில் சில உதிரும். உதிராத பூக்களே காய்களாகும். அக்காய்களின் கொத்தே தென்னங்குலை என்பர். ஒரு குலையில் பத்து அல்லது பதினைந்து காய்கள் காய்க்கும். தென்னை மரம் ஆறாண்டுகளுக்குள் பலன் கொடுக்கும். ஓராண்டில் தென்னை சுமார் நூறு காய்கள் காய்க்கும். தென்னை நமக்குப் பல வகைகளில் பயன் தருகின்றது. அதன் முற்றாத காயை இளநீர் என்கிறோம். இளநீரைக் கோடையில் மக்கள் விரும்பிப் பருகுவார்கள். முற்றிய காயைத் தேங்காய் என்கிறோம். தேங்காய் ஒரு சிறந்த உணவுப் பொருள். பலவகைத் தின்பண்டங்கள் தேங்காயைக் கொண்டு செய்யப்படுகின்றன.

**<u>கேள்விகளுக்குப் பதிலளித்திடுக.</u>**

1. எவை தென்னை இனத்தைச் சேர்ந்தவை?
2. பூக்கள் எதிலிருந்து உதிரும்?
3. தென்னை எத்தனை ஆண்டுகளில் பலன் தரும்?
4. தென்னை வளர்வதற்கு ஏற்ற இடம் எது?
5. இளநீர் என்பது எது?
6. தேங்காய் எதற்கு உதவும்?

**விடைகள்:**

- தென்னை ஆறாண்டுகளில் பலன் கொடுக்கும்.
- இளநீர் என்பது முற்றாத காயாகும்.
- தென்னை மணற்பாங்கான இடத்தில் செழித்து வளரும்.
- தேங்காய் பலவகைத் திண்பண்டங்கள் செய்ய உதவும்.
- வெடித்து விரிந்த பாளையிலிருந்து பூக்கள் உதிரும்.
- ஈச்ச மரமும் பனைமரமும் பாக்கு மரமும் தென்னை இனத்தைச் சேர்ந்தவை.

LIVEWORKSHEETS